**அம்பலாந்தோட்டை பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

அம்பலாந்தோட்டை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, தேறிய சொத்துக்களிலான மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படையான 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கு எனக்கு முடியாதிருந்தது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நான் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையால் நிர்மாணிக்கப்பட்டிருந்த 03 கட்டிடங்களின் கூட்டுப் பெறுமதியான ரூபா 5,053,339 மற்றும் ரூபா 74,250 தொகையான அலுவலக உபரகணங்கள் மற்றும் பொறிகள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும். | சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கடந்த வருடம் மற்றும் மீளாய்வாண்டுக்கு உரியதாக சொத்துக்களை குத்தகைக்கு வழங்கியமையால் கிடைத்த பணம் ரூபா 1,963,500 வருமானத்திற்கு எடுக்கப்படாது கூட்டு வைப்பு மற்றும் கேள்வி வைப்புகளின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருநந்தது. | சேகரிக்கப்படும் பணத்தை சபையின் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சேகரிக்கப்படும் பணத்தை சபையின் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நிரந்தர பதவியணிக்கு செலுத்தப்பட்ட சம்பளம், அமைச்சர் படிகள் மற்றும் ஊழியர் கடன் குறைவாக மீளளிப்பு செய்யப்பட்ட ரூபா 997,934 தொகை பெற வேண்டிய மீதியொன்றாகவும் கூடுதலாக மீளளிப்பு செய்யப்பட்ட ரூபா 260,701 தொகை செலுத்த வேண்டிய மீதியொன்றாகவும் கணக்க வைக்கப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் இனங்காணப்பட்டு சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பட்டியலிடப்பட வேண்டிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 622,442 மற்றும் கடன் கொடுத்தோர் நிதியேற்பாடுகளை ஒதுக்கீடு செய்தல் ரூபா 360,701 இனால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | வருமானம் மற்றும் கடன் கொடுத்தோர் நிதியேற்பாடுகள் சரியாக கணக்கு வைக்கப்பட்டு ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | கடந்த வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 331,180 கூட்டுப் பெறுமதியுடைய நீர்த்தாங்கிகளின் 04 தூண்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்துகளின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நன்கொடைகள் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஊ) | மூன்று பணிகளுக்குரிய மூலதனப் பெறுவனவுகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 295,263 இனால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | மூலதனப் பெறுவனவுகள் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (எ) | அம்பலாந்தோட்ட வியாபார கட்டிட தொகுதியில் 03 கடைகளில் இருந்து பெறவேண்டிய சேகரிப்பு பணம் ரூபா 150,000 கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | பெறவேண்டிய வருமானங்கள் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஏ) | களஞ்சிய இருப்பு மீதியினுள் காணப்பட்ட 05 உருப்படிகளில் கூட்டுப் பெறுமதி ரூபா 152,169 ஆல் குறைத்தும் 03 உருப்படிகளில் கூட்டுப் பெறுமதி ரூபா 17,382 இனால் அதிகரித்தும் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | இருப்பு சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |

### 1.6.2 தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான இனங்காணப்படாத செலவு மீதி ரூபா 181,875 ஆகும். | வேறுபாட்டினை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | தொங்கல் கணக்கு மீதியை இனங்கண்டு துரிதமாக தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காணப்படும் 02 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அதற்குரிய பயன்பாட்டு ஆவணங்கள் / பட்டோலைகளின் மீதிகளுக்கிடையே ரூபா 156,181 ஆன வேறுபாடு நிலவியது. | வேறுபாடுகளுக்கான காரணங்களை இனங்கண்டு மீதிகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரிய மீதிகளின் வெறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகள் திருத்தப்பட வேண்டும். |

**1.6.4 கணக்காய்வுக்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 160,321,537 தொகையான 09 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதிக்க முடியாதிருந்தது. | குறிப்பிட்ட நிலுவைகளுக்கான ஆவணங்கள் அல்லது அட்டவணைகள் எதுவும் இல்லை, மேலும் விவரங்கள் காணக்கூடிய மீதிகளின் விவரங்களை எதிர்காலத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.7 இணங்காமை**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1946 இன் 30 ஆம் இலக்க வரி மற்றும் மதிப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவு | 2011 ஆண்டுகளின் மதிப்பீடுகளின் அடிப்படையில் மீளாய்வாண்டில் வீத வரி அறவிடப்பட்டமையால் மதிப்பீடு கால அடிப்படையில் செயற்படாத காலப்பகுதி முறையே 07 வருடங்கள் ஆகும். | மதிப்பீட்டு அறிக்கை கிடைத்த பின்னர் வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 102 மற்றும் 104 | ரூபா 28,488 பெறுமதியான இயந்திர உபகரணங்கள், கட்டிட உபகரணங்கள் மற்றும் பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்ட உருப்படிகள் தொலைந்து போனமை தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணாமல் போன பொருட்கள் தொடர்பில் ஆரம்பகட்ட விசாரணையை மேற்கொள்ளுமாறு உள்ளக கணக்காய்வாளரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2023 யூலை 11 ஆந் திகதிய 14/2022(III) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | சபையின் உத்தியோகத்தர் ஒருவர் விடுமுறையை அங்கீகரிக்காது 2023 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் வெளிநாடு சென்றிருந்த போதிலும், விடுமுறையை அங்கீகரிப்பதற்கு கணக்காய்வு திகதியான 2024 பெப்ரவரி 15 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விடுமுறை விண்ணப்பப் படிவங்களில் உள்ள குறைபாடுகளை சரிசெய்து சமர்ப்பிக்குமாறு தலைமை அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,443,340 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 7,363,800 ஆக காணப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| வருமான மூலம் | 2023 மதிப்பீட்டு வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பீட்டு வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| ஏனைய வரி | 5,310,000 | 5,940,312 | 6,627,668 | 3,170,102 | 5,581,000 | 5,377,655 | 6,696,803 | 3,857,460 |
| வாடகை | 15,432,000 | 12,575,167 | 16,164,732 | 5,159,267 | 254,271,000 | 12,493,686 | 14,023,430 | 8,748,833 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,647,000 | 3,685,863 | 3,978,259 | 467,850 | 2,778,000 | 2,023,292 | 2,448,562 | 760,245 |
| ஏனைய வரு மானங்கள் | 12,896,000 | 14,561,420 | 14,503,543 | 607,790 | 18,543,000 | 8,486,845 | 8,552,093 | 549,911 |
| **மொத்தம்** | **36,285,000** | **36,762,762** | **41,274,202** | **9,405,009** | **281,173,000** | **28,381,478** | **31,720,888** | **13,916,449** |

2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெற வேண்டிய வீதவரி ரூபா 2,800,752 மற்றும் 96 கடைகளிலிருந்து பெற வேண்டிய கடை வாடகை ரூபா 1,018,042 தொகையை அறவிடுவதற்கு பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 158(1) மற்றும் 159(1) ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வீதவரி ரூபா 252,086 மற்றும் கடை வாடகை ரூபா 515,488 அறவிடப்பட்டது என்பதும் எஞ்சிய நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. | நிலுவை வருமானம் துரிதமாக அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | 162 வியாபார அலகுகளில் இருந்து பெற வேண்டிய ரூபா 369,350 தொகையான வரி 2022 நவம்பர் 25 ஆந் திகதிய 2308 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 2023 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் அறவிடப்பட வேண்டிய போதிலும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 09 அலகுகளுக்கான வழக்கு பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன், 153 அலககள் நீதிமன்றத்திற்கு கொடுப்பனவு மேற்கொண்டுள்ளமை. | நிலுவை வருமானம் துரிதமாக அறவிடப்பட வேண்டும். |
| (இ) | வருடாந்தம் குத்தகைக்கு வழங்கப்படும் 05 ஆதனங்களிலிருந்து பெற வேண்டிய குத்தகை வாடகை ரூபா 1,027,975 மற்றும் கடந்த வருடத்திற்கு உரிய விலைக்கேள்வி வரி வழக்கு தொடரப்பட்டமையால் பெற | ரூபா 219,234 ொதகை அறவிடப்பட்டுள்ளதுடன், பரவகும்புக்க வாரச் சந்தையிலிருந்து பெற வேண்டிய ரூபா 808,741 | நிலுவை வருமானம் துரிதமாக அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய ரூபா 1,427,941 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன், சபைக்கு சொந்தமான குத்தகைக்கு வழங்கக்கூடிய 10 ஆதனங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | தொகைக்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை. | |
| (ஈ) | சபைக்கு சொந்தமான வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் வாடகைக்கு வழங்கியமையால் மற்றும் நடமாடும் கை வண்டிக்காக பெற வேண்டிய ரூபா 1,617,259 மற்றும் ரூபா 68,050 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வாகன வாடகையின் பெறுமதியில் ரூபா 76,020 தொகைக்கு உரிய தகவல் மாத்திரம் சபையிடம் உள்ளதுடன், அந்த பணத்தை செலுத்துமாறு அறிவுறுத்தியதாகவும், வாடகை செலுத்தாத நடமாடும் கை வண்டிகளை சபைக்கு சுவீகரிப்பதற்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிலுவை வருமானம் துரிதமாக அறவிடப்பட வேண்டும். |
| (உ) | மதிப்பீட்டு அறிக்கையில் உள்ளடக்கப்படாது 22 விளம்பரப் பலகைகள் காணப்பட்டதுடன், அவற்றிலிருந்து அறவிடப்பட வேண்டிய கட்டணம் ரூபா 195,500 ஆனமையால் சபையின் வருமான பரிசோதகர் தமது கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றியிருக்கவில்லை என்பதும், மதிப்பாய்வு பணிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட செலவினம் விளைவற்ற செலவினமொன்றாகியுள்ளமை அவதானிக்கப்பட்டது. | 2024 ஆம் ஆண்டின் போது இந்த தவறை திருத்தி கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | வருடாந்த மதிப்பாய்வு சரியாக மேற்கொள்ளப்பட்டு கட்டணம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | 50 அறிவித்தல் பலகைகளுக்கு பெற வேண்டிய ரூபா 428,100 ஆன கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 21 அலகுகளிலிருந்து ரூபா 157,800 அறவிடப்பட்டுள்ளமை, 29 அலகுகளுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை. | நிலுவை வருமானம் துரிதமாக அறவிடப்பட வேண்டும். |
| (எ) | மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்து பெற வேண்டிய நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 3,427,813 மற்றும் ரூபா 24,573,692 ஆகும். | 2022 ஆம் ஆண்டுக்குரிய முத்திரைக் கட்டணம் கிடைத்ததாகவும், எஞ்சிய மீதிகை பெற நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை. | நிலுவை வருமானம் துரிதமாக அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தெருவிளக்குகள் கணக்கெடுக்கப்பட்டு, எண்ணிடப்பட்டு ஆவணப்படுத்தப்படல் கணக்காய்வு திகதியான 2024 பெப்ரவரி 16 வரை நிறைவு செய்யப்பட்டிராததுடன், சபையின் அதிகார வரம்பிற்குட்பட்ட 55 கிராமங்களில் 07 கிராமங்களில் மட்டுமே மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணிகள் முடிக்கப்பட்டன. | அந்த மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி தற்போது மீதமுள்ள தொகுதிகளில் தொடங்கப்பட்டுள்ளது. | மக்கள் தொகை கணக்கெடுப்பு நடவடிக்கைகள் சரியாக செய்யப்பட வேண்டும் மற்றும் பராமரிப்பு செலவுகள் செய்ய வேண்டும். |
| (ஆ) | மின்விளக்குகள் பொருத்தப்படும் பகுதி மற்றும் இடத்தின்படி, மின் விளக்குகளை வாங்கி நிறுவாமல் அனைத்து இடங்களிலும் நிறுவுவதற்காக ரூபா 1,490,000 மதிப்பிலான 18 வாட் LED விளக்குகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | மின்விளக்குகள் பொருத்தப்படும் இடங்கள் மற்றும் பகுதிகளுக்கு ஏற்ப மின்விளக்குகள் வாங்கி பொருத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | தேவையை கண்டறிந்து மின்விளக்குகள் வாங்கி பொருத்த வேண்டும். |
| (இ) | சபைக்கு சொந்தமான 07 வாகனங்கள் மற்றும் இயந்திரங்களின் வருமானம் 2023 ஆம் ஆண்டில் ரூபா 1,095,550 ஆக இருந்த போதிலும், அவற்றுக்கான எரிபொருள் செலவு ரூபா 5,661,025 ஆக இருந்த போதிலும், வருடத்தில் ஏற்பட்ட எரிபொருள் செலவை ஈடுசெய்ய வருமானத்தை ஈட்ட முயற்சிகள் எடுக்கப்படவில்லை. | பொதுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இலவச சேவைகளை வழங்க வேண்டியதன் அவசியத்தால் செலவுகள் அதிகரித்தன. | செலவுகளை ஈடுகட்ட வருவாயை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) | 04 அங்கீகரிக்கப்பட்ட கட்டிடத் திட்டங்களுடன் தொடர்புடைய மேவுகை அனுமதிக் கட்டணங்கள், செல்லுபடியாகும் கால நீட்டிப்புக் கட்டணம் மற்றும் இணக்கச் சான்றிதழ் கட்டணங்களாக ரூபா 649,568 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | விண்ணப்பதாரர்களுக்கு திருத்தப்பட்ட திட்டங்களைச் சமர்ப்பித்து ஒப்புதல் பெறவும், நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்தவும் அறிவிக்கப்பட்டது. | நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்தி திருத்தப்பட்ட திட்டங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2013 ஆம் ஆண்டு முதல், பல்வேறு அரச நிறுவனங்களால் சபைக்கு வெகுமதியளிக்கப்பட்ட கணக்காய்வு திகதி வரை சபையின் பெயரில் பதிவு செய்யப்படாத 07 வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் மற்றும் 143 காணிகள் மற்றும் கட்டிடங்களின் சட்ட உரிமைகள் மீளாய்வாண்டு இறுதி வரை கையகப்படுத்தப்படவில்லை. | இயந்திரங்கள் மற்றும் நில கட்டிடங்களை கையகப்படுத்த தேவையான ஆவணங்கள் தயார் செய்து அனுப்பப்பட்டுள்ளமை. | சொத்துக்களை சட்டப்பூர்வமாக உரிமையாக்கிக் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

### 3.3 செயற்திட்டங்கள், செயற்பணிகள் அல்லது மூலதனப் பணிகளை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டுக்கான மூலதனச் செலவுத் திட்டத்தில், சபைப் பகுதியில் வீதிகள் மற்றும் வடிகால்களை அபிவிருத்தி செய்வதற்கு வருடாந்த பாதீட்டின் மூலம் ரூபா 3,200,000 ஒதுக்கப்பட்டுள்ள போதிலும், வருடத்தில் அந்த அபிவிருத்தி முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்த முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்காமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்காததால் இந்தப் பணிகளைச் செய்ய முடியவில்லை. | வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அபிவிருத்தி முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2006 இன் அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.6.1 ஆம் பிரிவின் பிராகரம், திட்டவட்டமான அமைப்புக்குறிப்பீடுகளை குறிப்பிடாது ரூபா 929,700 கூட்டுப் பெறுமதியான டயர் மற்றும் ரியுப்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | குறிப்பிட்ட விவரக்குறிப்புகளைக் குறிப்பிடுவதன் மூலம் எதிர்கால பெறுகைகள் மேற்கொள்ளப்படும் என்பது. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2006 இன் அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.8.1 (அ) ஆம் பிரிவின் பிராகாரம், நபரொருவர் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு மற்றும் பெறுகைகள் குழு ஆகிய இரண்டிலும் அங்கத்தவராக இருக்க முடியாத போதிலும், தொழில்நுட்ப சேவைகள் உத்தியோகத்தர் மீளாய்வாண்டுக்கான தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு மற்றும் பெறுகைகள் குழு ஆகிய இரண்டிலும் அங்கத்தவராக நியமிக்கப்பட்டிருந்தார். | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாதவாறு கொள்வனவுகள் இடம்பெற வேண்டும். | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பரவகும்புகவில் இருந்து மாமடல வரை நீர் குழாய்கள் பதிக்கும் திட்டத்திற்காக சபையின் ஜேசிபி (JCB) இயந்திரங்கள் 02 சமூக அடிப்படையிலான அமைப்புகளுக்கு வழங்கப்பட்டதுடன், ஒரு மீட்டர் மணித்தியாலத்திற்கு ரூபா 6,500 இற்கு பதிலாக 130.9 மீட்டர் மணித்தியாலத்திற்கு வாடகை செலுத்த வேண்டும் எனினும், அந்த இயந்திரங்களை வாடகைக்கு விடாததால் சபை நிதியத்திற்கு ரூபா 305,546 தொகையான நட்டம் ஏற்பட்டுள்ளது. | நிதி மற்றும் கொள்கைக் குழுவின் முடிவின்படி, எரிபொருள் செலவு மட்டுமே அறவிடப்பட்டது என்பது. | சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நஷ்டத்தை பொறுப்பான தரப்பினரிடம் இருந்து வசூலிக்க வேண்டும். |

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உண்மையான பதவியணி முறையே 129 மற்றும் 122 ஆக இருந்ததால், 02 பதவிகள் தொடர்பான 07 மிகைகளை முறைமைப்படுத்த மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மிகைப் பதவியணியை அங்கீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பணியாளர்களின் மிகைகளை முறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4:2:3, 4.5 மற்றும் 4.6 ஆம் பந்திகள் மற்றும் 2019 யூன் 27 ஆந் திகதிய திறைசேரி பிரதிச் செயலாளரின் 05/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்திக்கமைய சபையில் சேவையாற்றி மரணமடைந்த மற்றும் சேவையை கைவிட்டுச் சென்ற 06 ஊழியர்களிடமிருந்து பெற வேண்டிய ரூபா 169,749 தொகையான ஊழியர் கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒரு உத்தியோகத்தரிடம் இருந்து ரூபா 5,000 வசூலிக்கப்பட்டுள்ளதாகவும், மற்றொரு உத்தியோகத்தரிடம் தலா ரூபா 2,000 தவணை முறையில் செலுத்தி வருவதாகவும், மற்ற உத்தியோகத்தர்களிடம் கடனை வசூலிக்க தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்பது. | நிலுவையில் உள்ள கடன் தொகையை வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். |
| (இ) | சபையின் சேவையில் உள்ள 07 பணியாளர்களுக்கு பதவியின் அங்கீகரிக்கப்பட்ட கடமைகளைத் தவிர வேறு கடமைகள் ஒதுக்கப்பட்டிருந்தன. அதற்காக மீளாய்வாண்டில் ரூபா 3,290,785 சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக சபை நிதியிலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சேவை தேவைக்கு ஏற்ப பிற கடமைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. | பணியாளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளில் ஈடுபட வேண்டும். |